ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1859/4 - 2014 අප්‍රේල් මස 22 වැනි අඟහරුවාදා - 2014.04.22

*1859/4 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திச் செயல்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திச் செயல்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருமாகிய மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இவ்வட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட காணியானது நகர அபிவிருத்திச் செயல்திட்டத்திற்கு உடனடியாகத் தேவைப்படுகின்றது என கருதுவதனால், குறிப்பிட்ட காணி அப்படியான நோக்கத்திற்குத் தேவையென இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*சனாதிபதி செயலகம்,*
*கொழும்பு ,*
*2014, ஏப்பிறல் 08.*

**அட்டவணை**

*மேல் மாகாணம் (கொழும்பு மாவட்டம், கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவு, கொழும்பு மாநகர சபை எல்லையிலுள்ளான வட்டார இல. 20, கோட்டையில் அமைந்துள்ளதும், 2006.08.08 ஆந் திகதியிடப்பட்டு, காணி அளவிடை அத்தியட்சகரால் தயாரிக்கப்பட்ட முன்னீட்டுச் சுவடி இல.* Co/ Col /UDA/ 2006/ 208 *இல், காட்டப்பட்ட காணித்துண்டு இல. 26 (பகுதி) ஆனது 00ஏ. 00றூ. 30பேர்ச்சஸ் விஸ்தீரணத்தைக் (அண்ணளவாக) கொண்டுள்ளது.*

*குறிப்பிட்ட காணியின் எல்லைகள் பின்வருமாறு :-*

*வடக்கு : காணித்துண்டு இல. 25 ;*
*கிழக்கு : வைத்தியசாலை ஒழுங்கை ;*
*தெற்கு : காணித்துண்டு இல. 26 இன் பகுதியில் அமைந்துள்ள ரேணுகா கட்டிடம் ;*
*மேற்கு : சனாதிபதி மாவத்தை.*

*5- 132*



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*